**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**<u>OS.182/2019</u>**

**<u>07.02.2026.</u>**

**<u>DW - 1</u>**

**<u>பி.வா.சா.1. காமராஜ், த/பெ. கோபாலகிருஷ்ணன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:**

வாதி எவ்வளவு தொகைக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் - ரூ.75 ஆயிரத்திற்கு போட்டுள்ளார். வாதி தாக்கல் செய்த வழக்குரையில் வாதி எந்த முகவரியில் வசிக்கிறார் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் - சரிதான். விஜயகுமார் முகவரி பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் காசோலையில் என்ன தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - 12.11.2016 என்று போடப்பட்டுள்ளது. ஆனால் தேதியை நான் எழுதவில்லை. காசோலை எண்.314576 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். விஜயகுமார் எனது காசோலையை பயன்படுத்தியது தொடர்பாக காவல்துறையில் புகார் கொடுத்தேனா என்றால் - காவல்துறையில் புகார் கொடுத்தேன். நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ள சொல்லவிட்டார்கள். நான் அவ்வாறு எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றாலும் அவ்வாறு கொடுத்திருந்தால் குற்ற வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் - சரியல்ல. காசோலை திரும்ப வந்தபோது தொடர்பாக வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் - சரியல்ல. எனக்கு விஜயகுமார் யார் என்றே தெரியாது. வாதியிடம் ரூ.75 ஆயிரம் பெற்றுக்கொண்டுதான் காசோலையை கொடுத்துள்ளேன் என்றாலும் அந்த வங்கி கணக்கை கையாளாமல் வேண்டுமென்றே மறைத்து வேறொரு கணக்கை துவங்கிவிட்டேன் என்றால் - சரியல்ல. 2007 லேயே திருவாரூர் SBI, வங்கியில் கணக்கு வைத்திருக்கும் பட்சத்தில் எனக்கு வரவு செலவு உள்ள வங்கி கணக்கு காசோலையை கொடுக்காமல் வேறொரு வங்கி காசோலையை கொடுத்துள்ளேன் என்றால் - எனக்கு விஜயகுமாரை யார் என்றே தெரியாது. மேலும் நான் வேலைக்கு சென்றபின்னர் தான் திருவாரூர் SBI, வங்கி கணக்கு துவங்கினேன். வாதியை தெரியாது என்பதற்கு நான் எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் - சரியல்ல. வாதி கோரியுள்ளவாறு நான் வாதிக்கு பணம் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் - சரியல்ல. பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் - சரியல்ல. ராஜீவிடம தான் கடன் வாங்கினேன். அவருக்கு தான் காசோலை கொடுத்தேன் என்று சாட்சி கூறுகிறார். திருவாரூர் ராஜீவிடம் நான் வரவு செலவு வைத்துள்ளேன் என்றாலும் அவ்வாறு அவரிடம் பணம் கேட்கும்போது அவரிடம் பணமில்லை என்பதால் அவரது உறவினரான வாதியிடம் கடன் பெற்றுள்ளேன் என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,<br>
சார்பு நீதிபதி<br>
மன்னார்குடி.